1. 4 நபர்கள் நான்கு வேலைகளை நான்கு நாள்களில் செய்வர் எனில், 40 நபர்கள் 40 வேலைகளை ----நாள்களில் செய்வர்.

(அ) 40 (ஆ) 10 (இ) 5 (ஈ) 4

2. 16 ஆண்கள் ஒரு வேலையின் பாதியை 9 நாள்களில் முடிப்பர். அதே வேலையை 8 ஆண்கள் எத்தனை நாள்களில் முடிப்பர்?

(அ) 30 (ஆ) 36 (இ) 24 (ஈ) 25

3. நாளொன்றுக்கு 6 மணி நேரம் வேலை செய்து, 5 பெண்கள் ஒரு வேலையை 12 நாள்களில் முடிப்பர். அதே வேலையை 10 பெண்கள் 6 நாள்களில் முடிக்க நாளொன்றுக்கு எத்தனை மணி நேரம் வேலை செய்ய வேண்டும்?

(அ) 6 (ஆ) 7 (இ) 8 (ஈ) 9

4. 64 நபர்கள் 40 நாள்களில் 256 கிலோ அரிசியை உட்கொள்வர்.------நபர்கள் 30 நாள்களில் 75 கிலோ அரிசியை உட்கொள்வர். இதிலுள்ள கலப்பு மாறலின் வகையைக் காண்க.

(அ) நேர் – நேர் (ஆ) நேர் –எதிர் (இ) எதிர் –எதிர் (ஈ) எதிர் – நேர்

5. ஒரு முகாமில், 120 மாணவர்களுக்கு 40 நாள்களுக்குப் போதுமான உணவு இருந்தது. 10 நாள்களுக்குப் பிறகு, மேலும் 30 மாணவர்கள் அவர்களுடன் இணைந்தனர். இப்போது உணவானது '$n$' நாள்களுக்கு போதுமானதாக இருந்தது எனில் '$n$' இன் மதிப்பைக் காண்க.

(அ) 20 (ஆ) 24 (இ) 30 (ஈ) 36

6. 30 வேலையாள்கள் 12 நாள்களில் ரூ.8000 ஐ ஊதியமாகப் பெறுகின்றனர் எனில், 18 வேலையாள்கள் 9 நாள்களில் பெறும் ஊதியத்தைக் காண்க.

(அ) ₹. 2400 (ஆ) ₹.3600 (இ) ₹.6000 (ஈ) ₹.7200

7. A ஆனவர் ஒரு வேலையை 21 நாள்களில் செய்து முடிப்பார். B ஆனவர் Aஐ விட 75% கூடுதல் திறன் பெற்றவர். அதே வேலையை B ஆனவர் முடிக்க எடுத்துக்கொள்ளும் நாள்களைக் காண்க.

(அ) 12 (ஆ) 15 (இ) 9 (ஈ) 14

8. P ஆனவர் ஒரு வேலையை 24 நாள்களிலும் Q ஆனவர் அதை 12 நாள்களிலும் முடிப்பர். இருவரும் இணைந்து அந்த வேலையை ________ நாள்களில் முடிப்பர்.

(அ) 6 (ஆ) 10 (இ) 8 (ஈ) 5

9. A மற்றும் B ஆகியோர் ஒரு வேலையை 12 நாள்களிலும், Bமற்றும்C ஆகியோர் 20 நாள்களிலும் C மற்றும் A ஆகியோர் 15 நாள்களிலும் முடிப்பர் எனில், C தனியே அந்த வேலையை __________ நாள்களில் முடிப்பார்?

(அ) 20 (ஆ) 30 (இ) 45 (ஈ) 60

10. A ஆனவர் B – ஐ விட 3 மடங்கு திறமை வாய்ந்தவர். அவர் ஒரு வேலையை, B எடுத்துக்கொள்ளும் நேரத்தைவிட 12 நாள்கள் குறைவாக எடுத்துக்கொண்டு முடிக்கிறார் இருவரும் சேர்ந்து அந்த வேலையை முடிக்க எடுத்துக்கொள்ளும் நேரமானது ________ நாள்கள்.

(அ) 3 (ஆ) $4\frac{1}{2}$ (இ) 6 (ஈ) $7\frac{1}{2}$

LIVEWORKSHEETS